13 மே 2018

Newbec

NEW WAY OF BEING CHURCH

பாஸ்கா காலம் 7ம் ஞாயிறு

எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்

# கிறிஸ்துவில் இயங்கும் குடும்பம்...

# நற்செய்தி அறிவிக்கும்

இயேசு நம்மை அழைக்கிறார்... அவரைப் பின்செல்ல, அனைவருக்கும், உலகின் எல்லா மூலைக்கும், நகரங்களுக்கும் கிராமங்களுக்கும், நமது சொந்த குடும்பங்களுக்கும் அவரது அன்பையும் நற்செய்தியையும் பரப்புவோம். இந்தப் பணியில், அவரது ஆற்றலுடனும் அன்புடனும் சிலுவையைத் தூக்கிச் செல்லத் தொடங்கும் போது நம்மை அவர் புனிதப்படுத்துகிறார். இந்த பணியில, தனிநபர் என்ற முறையிலும் குடும்பம் என்ற முறையிலும் அவர் அன்புடன்



அழைக்கிறார். திருத்துவத்தின் அன்பில் இணைகிறோம், நம் அனைவரையும் இணைக்கும் அதே அன்பை நாம் அறிந்து கொள்கிறோம். ஆண்டவரின் உயிர்ப்பு, ஒரு கிறிஸ்துவன் என்ற சுதந்திரத்தை வழங்குகிறது. உலகில் பல பிரச்னைகள் இருந்தாலும் நம்பிக்கை வளர்கிறது. நமது வாழ்வின் மையமாக இருக்கும் இயேசுவில்தான் நம்பிக்கை உண்டு என்பது நிதர்சனம்.

அரசியல்- பொருளாதார நிலையற்ற காலக்கட்டத்தில் நமது குடும்பங்கள் வாழும் நிலையில், இன மற்றும் சமய இன்னல்-இடையூறுகளை மறைமுகமாக நாம் தொடர்ந்து எதிர்நோக்கி வருகிறோம். நமக்கும் நமது பிள்ளைகளுக்கும் எதிர்காலத்தில் என்ன நேரிடும் என நாம் அஞ்சுகிறோம். இதுநாள் வரைக்கும் நேசித்து வந்த நாட்டை, சமயச் சகிப்புயின்மைக்கும் தீவிரவாதத்திற்கும் இழந்து விடுவோமோ என்ற பயம் நிலவுகிறது. தேசிய அரசியல்சாசன உணர்வு மங்கி விடுவோமோ என்ற அவநம்பிக்கை ஏற்படுகிறது.

இயேசு மற்றும் நமது பரலோகத் தந்தையின் கரத்தில் நமது பிள்ளைகளை ஒப்படைத்து செபிக்கும் பெற்றோர்களாகிய நம்மைப் போல், தமது பரலோகத் தந்தையிடம் நமக்காக இயேசு மன்றாடுவதை (யோவான் 17) நாம் பார்க்கிறோம். நம்மை வழிநடத்தி காத்து வரும்படி தமது தந்தையின் அன்பு அரவணைப்பில் நம்மை ஒப்படைக்கிறார். விசுவாச வாழ்விலும் உலக வாழ்விலும் நமது பிள்ளைகள் வழிகாட்டப்பட வேண்டுமென்று நாம் விரும்புகிறோம். 'தீயோனிடமிருந்து' நாம் பாதுகாக்கப்பட வேண்டுமென்று இயேசு செபிக்கிறார். இதனால் நமது வாழ்வில் பிரச்சனைகளும் சவால்களும் வராது என்பதல்ல. நமது பிள்ளைகளுக்கு ஆசிப்பது போல நமக்காகவும் இயேசு ஆசிக்கின்றார். விசுவாச வாழ்வில் நாம் வளர நம்மோடு வருகிறார். உலகிலும் நாட்டிலும் பிரச்னைகளை எதிர்நோக்கியப் போதிலும், கிறிஸ்துவர் என்ற முறையில், கடந்த வியாழக்கிழமை திருச்சபை கொண்டாடிய இயேசுவின் விண்ணேற்பு விழா, நம்மை முன்னேடுத்துச் செல்கிறது. உலகில் நமது வாழ்வின் மையத்தை இயேசு ஏற்கும் போது, நமது நம்பிக்கை அவரது தெய்வீகத்தில் இருப்பதை அது உணர்த்துகிறது. நம்மில் நமக்காக அவர் இருக்கும் வரை, எதற்கும் குறைவு இல்லை.

நமது அன்றாட வாழ்க்கை போராட்டத்தில் அவரது பாதுகாப்புக்காக நாம் செபிக்கும் போது கடவுள் நமது அண்டையில் இருப்பதை உணர முடியும். அவ்வாறே நமது வட்டாரத்திலுள்ள சமூகங்கள் அல்லது குடும்பங்களுடன் சேரும் போது அதே உணர்வை நம்மால் அனுபவிக்க முடிகிறது. தனிபட்ட குடும்பங்களாக அல்லாமல், கிறிஸ்து மைய குடும்பங்களாக, கிறிஸ்துவை அன்பு செய்யும் குடும்பங்களாக, இதற்கெல்லாம் மேலாக, நம்மில் கிறிஸ்து, அனைவரிலும் ஒன்றாக இருக்கிறார். ✝

> காதல் குருட்டுத்தனமல்ல; இறுதிவரை அது நிலைத்திருக்கும் . காதல் ஈடுபாடு கொண்டது; ஈடுபாடுகள் கூடும் போது அதன் குருட்டுத்தனம் குறைகிறது.
>
> - ஜி.கே.செஸ்தர்தன் (ஆங்கில எழுத்தாளர் & சிந்தனையாளர்)

## வாரம் ஒரு வசனம்

நமது நம்பிக்கை அவரது தெய்வீகத்தில் இருப்பதை.

INTERNAL CIRCULATION ONLY
BUL 19/2018

Published by: Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

Print: Steno Print Sdn Bhd
Design: The Mustard Seed Studio

**மினவுதல் மாதா தேவாலயம்**
85 A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே. 06-762 4468 /763 4934/767 7542
தொ.நகல்: 06-767 7544
Email: serembanvisitaion@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. ஜோர்ஜ் ஹரிசன்
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. அண்ட்ரூ கூய்


*2018 ஆம் ஆண்டின் கருப்பொருள்*

***எதிர் நோக்கு கொண்ட சீடர்களாகுவோம்.***

*2018 மே (வைகாசி) மாதத்தின் கருப்பொருள்:*

***கிறிஸ்துவில் வல்லமை கொண்ட குடும்பம்***

**மினவுதல் தேவாலயத்தின் 170 ஆம் ஆண்டை நோக்கிய பயணம்**
**(1848 - 2018)**

**<u>பங்கு அலுவலக நேரம்</u>**
திங்கள் - வெள்ளி: காலை 8.30 - மாலை 5.30
சனி: காலை 8.30 - மாலை 7.30
ஞாயிறு: காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**<u>இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்:: மே சனி 13 -05-2018 - ஞாயிறு 20 -05-2018 வரை</u>**
**<u>பாஸ்கா காலம் 7 ஆம் ஞாயிறு</u>**
திரு.பணி: 1: 15-17, 20 அ,20இ-26 திருபாடல்:102,1-2,11-12,19-20அ; 1 யோ 4,16 யோவான்:17:11-19
**“ஆண்டவர் தமது அரியணையை விண்ணகத்தில் நிலைநிறுத்தினார்**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 12 | 5.00 மாலை<br>5.30 மாலை<br>5.45 மாலை<br>6.00 மாலை | செபமாலை<br>இடைவிடா சகாய அன்னை<br>நற்கருணை ஆசீர்<br>திருப்பலி (ஆ) புனித புரூனோ 1 | |
| ஞாயிறு | 13 | 7.00 காலை<br>9.00 காலை<br>11.00 காலை<br>1.00 பகல் | திருப்பலி (தமிழ்) பு மரியா<br>திருப்பலி (ஆங்) பு.புரூனோ 2<br>திருப்பலி (சீனம்) மாலை 4.30தித்தி<br>திருப்பலி (தே மொ) | மறைக்கல்வ நடைபெறாது<br>முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு (முகிபுவ)<br>காலை 9.00-10.30(த) காலை 11.00 - 12.30 (தேமொ) காலை 110.00-12.30 (ஆங்கிலம்)<br>காலை 9.00-10.30(சீனம்) |
| திங்கள் | 14 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவியின்அருங்கொடை செபம்(ஆ) மாலை 7.30 அனைவரும் வருக* |
| செவ் | 15 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவியின்அருங்கொடை செபம்(சீ) மாலை 7.30 அனைவரும் வருக* |
| புதன் | 16 | காலை திருப்பலி நடைபெறாது | | **குருக்களின் மாதாந்த்ர தியானம் - APC, KL** |
| வியா | 17 | 6.45 கா | திருப்பலி | |
| வெள் | 18 | 6.45 கா | திருப்பலி | |

**பெந்தகோஸ்தே ஞாயிறு 20-05-2018**
திரு.பணி: 2:1-11 திரு.பாடல்: 103: கலாத்தியர்: 5:16-25; யோவா;15:26-37,16,12-15
**“ஆண்டவரே, உம் ஆவியை அனுப்பி மண்ணகத்தின் முகத்தைப் புதுப்பிக்கின்றீர்”**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 19 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை<br>இடைவிடா சகாய அன்னை<br>நற்கருணை ஆசீர்வாதம்<br>திருப்பலி (ஆ) (இளைஞர் குழு) | |
| ஞாயிறு | 20 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>01.00 பகல் | திருப்பலி (த)பு, இரேனியுஸ்<br>திருப்பலி (ஆ) (பு.பிரான்சிஸ்)<br>திருப்பலி (சீனமொழி)<br>மாலை 4.30தித்தி<br>திருப்பல் (தேமொழி) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ)<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 9.00 - 10.30 (சீனம் ) |

நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் **புதிய பங்கு மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் பாடல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்களின் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

**<u>2018 மே (வைகாசி) மாத செய்திகள்/நிகழ்வுகள்</u>**
ஆலய காணிக்கை
அ) 05/06 மே 2018 ரிம: 9,700.65
ஆ) சமூக அக்கறைப் பணிக்குழு ரிம: 6,061.00
இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!

**ii) <u>ஆலயத்திலுனுள் அமைதியைக் கடைப்பிடிப்போம்:</u>**
திருப்பலிகளுக்கு இடையில் வாசகங்கள் வாசிக்கும் ஒத்திகை அனுமதிக்கப்படாது. திருப்பலிகளுக்கு மரியாதையான உடையணிந்து வருமாறு கேட்டுக்கொள்கிறோம்

**<u>மரித்த ஆன்மாக்களுக்காக செபிப்போம்.</u>**
அ) மரியா பெருமாள் (இறப்பு 05/05/2018)
ஆ) சவரியம்மாள் அற்புதசாமி இறப்பு 05/05/2018)
இ) ரோஸ் சியு ஃபோங்

***முடிவில்லாத ஒளி இவர் மேல் ஒளிர்வதாக!***

- **<u>பெந்தகோஸ்தே திருவிழிப்பு 2018</u>**
  **“தூய ஆவியானவரே, எனக்கு ஆற்றல் அளித்தருளும்”**
  மே 19 (சனி) இரவு 8.00 - 12.00 நள்ளிரவு வரை
  ஆங்கிலம்/தேமொழி = ஆலயத்தில்
  சீனம் - விவிலிய அறையில்
  தமிழ் - தேவாலய மண்டபத்தில்
  பெந்தகோஸ்தே திருப்பலிகளில் கடைசியானோர் / தொலைந்துபோனோர் / எளியோர் / சிறியோர் இவர்களுக்கு நற்செய்தியைக் கொண்டு செல்லும் பணிக்காக அனுப்பப்படுதல் இவர்களுக்காக நாம் செபிப்போம்.
  <u>நம்முடைய அன்பான நன்றி</u>களை இரட்சகர் சபைக் குருக்களான அருட்பணி. ஜோன் போல், அருட்பணி. ஜோசப் அப்ரகாம் அருட்பணி யூஜின் லீ மற்றும் அருட்பணி பேட் ரிக் மாசாங் இவர்களுக்கு தெரிவித்துக்கொள்வோம்.

- **மே 15 & 16 குருக்களின் மாதாந்த்ர தியானம் -** APC, KL

- **மே 20 - புதிதாக திருமுழுக்குப் பெற்றவர்களை(** கிபுமுவ) தூதுப்பணிக்கு அனுப்பப்படுதல் (மிஸ்டகோஜியா) பெந்தகோஸ்தே ஞாயிறு

இன்று திருப்பலியை வழிநடத்திய அதிச புனித மரியா மற்றும் திருவழிபாட்டு குழுவினருக்கு நம்முடைய நன்றிகள்

**<u>பங்கு தூதுப்பணி</u>**

**<u>அதிச இல்லங்களில் திருப்பலி அட்டவணை:</u>**

அ) 14 மே (திங்கள்) புனித பெர்னதெத் (மார்ஜெரி) புனித பெர்னடின் 4( சிரம்பான் 2)
சிரம்பான் 2 ஹைட்ஸ்(சிரம்பான் 2) புனித மரியா (டெப்ம்ளர்/லோபாக்)

ஆ) 15 மே (செவ்வாய்) புனித அகஸ்டின்(தித்தி) சஹாயா கிறிஸ்துஸ் (கம்போங் செபீர்)
புனித கேப்ரியல்லா(காடோங்) புனித லூர்துஅன்னை-பு.லூசியா(சாகா)

இ) 16 மே (புதன்) புனித ஜோவானா(காடோங்) புனித லூர்து அன்னை-பு.ஜெசிந்தா(சாகா)
புனித பிரான்சிஸ் சேவியர்(சிகாமட்) புனித பெனடிக் (லாபு)

ஈ) 17 மே (வியாழன்) புனித லூர்து அன்னை(சாகா) புனித அனஸ்தாசியா(காடோங்)
புனித ரீத்தா & பு.சோபியா(பெர்மாய்) புனித ஃபேபயன்(சிகாமட்)

உ) 18 மே(வெள்ளி) புனித பெர்னடின் 3(சிரம்பான்2) புனித பிரான்சிஸ்கா & பண்டார் ஏக்கர்(சாகா, மார்ஜெரி)
புனித ஜோசப்(டெப்ம்ளர்/லோபாக்) புனித கெட்ரூட் (பெர்மாய்)

கூடுதல் விவரங்களுக்கு உங்களுடைய அதிச /சோன் பொறுப்பாளர்களை தொடர்பு கொள்ளவும்.

- **170 ஆம் ஆண்டு நிறைவு விழா புத்தகத்தின் அறிமுக வெளியீடு -** 20 மே காலை10.00 மணி (ஆங்கில திருப்பலிக்குப்பின்)
- நவநாள் / திருவிழா மே 23 - 31 வரை - மாலை 7.00 மணிக்கு
- **திருவிழாவைப் பற்றிய கையேடு** அனைத்து மொழிகளிலும் உள்ளது. உங்களுடைய பிரதியை எடுத்துச் செல்லுங்கள்.
- **அன்னை மரியாளின் கண்காட்சி:** மே 23 - 31 வரை மினவுதல் தேவாலய பார்லரில் கண்காட்சி நடைபெறும்.
- மினவுதல் தேவாலய வரலாற்று நடை: 170 ஆம் ஆண்டு காலப் பயணத்தை ஒட்டி ஒரு கண்காட்சி - விவிலிய அறையில் நடைபெறும்.மே 26 2018(சனிக்கிழமை)
- **<u>170 ஆம் ஆண்டு நி றைவுக்காக - “காபி மேசை ” நினைவுப்புத்தகம் மற்றும் வரலாற்று ஒளிவட்டு</u>** ஆகிய தயாரிப்பில் ஈடுபடும் குழுவினர்அனைவரையும் நம் செபங்களில் ஒப்புக்கொடுப்போம் இந்தப் புத்தகத்திற்காக முன்பதிவு செய்து கொள்ளலாம். தொடர்புக்கு: ஜெரோம் 019-790 8071 மற்றும் பங்கு அலுவலகத்தை நாடவும்.
- **14 ஆவது பொதுத் தேர்தல்** முழு வெற்றி பெற்றதற்காக இறைவனுக்கு நன்றி கூறுவோம். நாட்டின் குடிமக்களாகிய நாம் தொடர்ந்து புதிய பிரதமர் துன் மாதிரூகாகவும் அவருடைய மந்திரி குழுவினருக்காகவும் செபிப்போம்.
- **நெகிரி மாநிலத்தின் புதிய மந்திரி பெசார் மற்றும் அவர் தம் குழுவினருக்கு வாழ்த்துகள்.** இரண்டாவது தவணையாக தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபை உறுப்பினர் (சிரம்பான் ஜெயா) மாண்புமிகு குணசேகரன், மற்றும் மாண்புமிகு மேரி ஜோசப்பின் பிரித்தம் சிங் (ரஹாங்) இவர்களுக்கு நம்முடைய வாழ்த்துகள். இவர்கள் இருவரும் நம்முடைய மினவுதல் தேவாலய பங்கைச் சேர்ந்தவர்கள்.
- **13-05-2018 சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு வின்செண்ட் டி போல்** உறுப்பினர்களொடு கூட்டம் - ஆலய உணவுவிடுதி
- **19-05-2018 காலை 9.00 -1.00** வரை “இதை என் நினைவாகச் செய்யுங்கள்”நற்கருணைப் பணியாளர்களுக்கான உருவாக்கப் பயிற்சி (ஆ/தேமொ/த/சீனம்) வருகை கட்டாயம்.
- **அன்னையர் தினம்/தாதியர் தினம்/ ஆசிரியர்கள் தினம்.** இவர்கள் அனைவரையும் இறைவன் நல்ல உடல் நலத்தோடும், மகிழ்ச்சியோடும் நிறைவாய் வழிநடத்துவாராக! - அனைத்து திருப்பலிகளிலும் விசேச ஆசீர் வழங்கப்படும்.